(ஈ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு பொது விற்பனைவரி (இரண்டாம் திருத்த மசோதா)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ் நாடு 1970-ம் ஆண்டு பொது விற்பனைவரி (இரண்டாம் திருத்த) மசோதாவை இப்பேரவைக்கு அறிமுகம் செய்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவை அளித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துகொள்ளு கிறேன்.

5 அரசினர் மசோதாக்கள்

அ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு பொது விற்பனைவரி (இரண்டாம் திருத்த) மசோதா

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, தமிழ்நாடு 1970-ம் ஆண்டு பொது விற்பனைவரி (இரண்டாம் திருத்த) மசோதாவை இப் பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இம்மசோதாவை இப்பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இம்மசோதா அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறது.

6 1969–70-ம் ஆண்டுக்கான செலவு குறித்த இறுதி துணை நிதி அறிக்கை மீது விவாதம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவரவர்களே, 1969–70-ம் ஆண்டுக்கு 18½ கோடி ரூபாய்க்கு பேரவையின் அனுமதி வேண்டி வைக்கப்பட்டுள்ள இறுதி துணை மதிப்பீடுகள்மீது என்னுடைய பேரியக்கத் தின் சார்பிலே கொடுக்கப்பட்ட வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களை இந்த மாமன்றத்தின் முன் வைக்க விரும்புகிறேன்.

இந்தத் துணை மதிப்பீட்டிலே, வறட்சி நிவாரணப் பணிகளுக்காக 18 கோடி ரூபாய் செலவழித்திருப்பதாகவும், அதில் 14½ கோடி ரூபாய் மத்திய சர்க்காரிலிருந்து மானியமாகவும், கடனாகவும் பெறப்பட்டிருக் கிறது என்ற விவரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் இந்தத் துணை மதிப்பீட்டிலும் வறட்சித் துயர் தணிப்புக்காக 1,28,16,500 ரூபாய் நிதி ஒதுக்கம் கேட்கப்பட்டிருக்கிறது. பொதுவாகவே, சென்ற ஆண்டு 18 கோடி ரூபாய்க்கு தமிழகம் முழுவதும் சென்ற ஆண்டு வறட்சி நிவாரணத்திற்காக செலவு செய்யப்பட்டிருப்பதாகவும், அந்தப் பணி ஒழுங்காக, பயனுள்ளதாக ஊழலுக்கு இடமில்லாமலும் பரவலாகச் செய்யப்பட்டிருந்தால் இந்த ஆண்டு தற்போது மாவட்டங்களில் சில யிடங்களில் உள்ள வறட்சி இவ்வளவு கடுமையாக இருக்காது என்று பரவலாகச் சொல்லப்படுகிறது. எனவே, வறட்சி நிவாரண வேலை எவ்வாறு நடைபெற்றிருக்கின்றது என்பதை மதிப்பிடுவது பற்றிய மறு பரிசீலனை மிகவும் அவசியமாகிறது. எத்தகைய தவறுகள் எங்கே இழைக்கப்பட்டிருக்கின்றன என்று ஆராயப்பட்டால் இனி செய்யவிருக்கும் வேலைகள் செவ்வையாக இருக்க வசதியாகயிருக்கும். எனவே, மாநிலத்திலே எங்கெங்கு வறட்சி நிவாரண வேலைகள் எந்த அளவுக்கு நடந்தேறியிருக்கின்றன என்பதைப்பற்றி அரசாங்கம் தாமதமின்றி வெளியிடவேண்டுமென்று இந்த மன்றத்தின் மூலம் கேட்டுக்கொள்ளு கின்றேன். இராமநாதபுரம் மாவட்டத்தில் வறட்சி நிவாரண வேலையாக மிகப் பெரிய சமுதாயக் கிணறுகள் தோண்டப்பட்டிருக்கின்றன.